# பாலக்கோடு தேர்வு நிலை பேரூராட்சி
# தருமபுரி மாவட்டம்

**ந.க. எண் : 118/ 2010 /த.எ** **நாள் 16.06.2010.**

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010-2011

## ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு தேர்வு நிலை பேரூராட்சியில் அணைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010-2011ல் கீழ்க்கண்ட பணியை செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு 07.07.2010 புதன்கிழமை மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் அன்றைய தினம் மாலை 3.30 மணியளவில் நேரில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும். முன்னதாக இவ்வலுவலகத்தில் ஷெட்யூல் படிவம் உரிய தொகை செலுத்தி 06.07.2010ந்தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்தபுள்ளி படிவத்தின் விலை (விற்பனை வரி) | டேவணித் தொகை ரூ | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | சி.எப்.எல் தெருவிளக்குகள் அமைத்தல் | **5.00** | 1566/- | 10000 | 3 மாதம் |
| 2 | எம்.ஜி சாலை முதல் குறுக்கு தெருவில் தார்சாலை புதுப்பித்தல் மற்றும் ஒசூர் – அதியமான் கோட்டை சாலையில் கழிவு நீர் கால்வாய் அமைத்தல் (ஆண்கள் மேல் நிலைப் பள்ளி அருகில்) | **5.00** | 1566/- | 10000 | 3 மாதம் |
| 3 | பேருந்து நிலையத்தில் ஏற்கனவே உள்ள கடைகளின் முதல் மாடியில் கூட்ட அரங்கு மற்றும் உணவு அருந்தும் இடம் கட்டுதல் | **20.00** | 6264/- | 40000 | 6 மாதம் |
| 4 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பின்புறம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுதல் | **5.00** | 1566/- | 10000 | 3 மாதம் |
| 5 | 15வது வார்டு கல்கூடப்பட்டி புதிய காலனியில் வடிகால் வசதியுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல். | **5.00** | 1566/- | 10000 | 3 மாதம் |
| 6 | தக்காளி மார்க்கெட்டில் திறந்த வெளி அங்காடிகள் அமைத்தல் | **15.00** | 6264/- | 30000 | 6 மாதம் |
| 7 | தக்காளி மார்க்கெட் அருகில் உள்ள மயானத்தில் காரிய கொட்டகை, எரிமேடை மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல். | **6.30** | 3132/- | 12600 | 6 மாதம் |
| 8 | ஒசூர் – அதியமான் கோட்டை சாலையில் கழிவு நீர் கால்வாய் அமைத்தல் (ஊராட்சி ஒன்றியம் முன்புறம்) | **5.00** | 1566/- | 10000 | 3 மாதம் |

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் அலுவலக நேரங்களில், அலுவலக நாட்களில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவம் கிரயத் தொகை 06.07.2010 ந் தேதிக்குள் செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ, நிராகரிக்கவோ செயல் அலுவலர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.
3. ஒப்பந்தப்புள்ளி கோருபவர் இந்த அலுவலகத்தின் பதிவு பெற்ற ஒப்பந்ததாராக இருக்கவேண்டும்.
4. அஞ்சல் மூலம் அனுப்பபடும் ஒப்பந்தப்புள்ளி குறித்த நேரத்தில் அடியில் கையொப்பம் இட்டவருக்கு சேராவிட்டால் அல்லது நேரம் கழித்து கிடைத்தாலோ அதற்கு அடியில் கையொப்பமிட்டவர் பொறுப்பல்ல.
5. டேவணித் தொகை அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி அதற்குரிய செலுத்துச் சீட்டை (அசல்) இணைக்கப்பட வேண்டும்.
6. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் செயல் அலுவலரோ அல்லது அங்கீகாரம் பெற்றவராலோ திறந்து பரிசீலிக்கப்படும்.

7. ஒப்பந்தாரர் வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற மூன்று நாட்களுக்குள் உரிய ஒப்பந்தப்பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் வேலை உத்தரவில் குறிப்பிடும் தேதிக்குள் வேலை முடிக்கப்பட வேண்டும்.

8. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 06.07.2010ந் தேதி பிற்பகல் 5.00 மணி வரைத்தான் ( அலுவலக கடிகாரத்தின் படி ) விற்பனை செய்யப்படும்.

9. குறிப்பிட்ட காரணங்கள் இல்லாமல் பொதுவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த தொகை குறிப்பிடும் ஒப்பந்ததாரருக்கு வேலையை ஒப்படைக்கப்படும் , ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் மன்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டது ஆகும் .

10. ஒப்பந்தப்புள்ளி தேதி மற்றும் நேரம் மாற்றியமைக்கும் அதிகாரம் செயல் அலுவலருக்கு உண்டு.

11. ஒப்பந்ததாரர் 2009–2010 ம் ஆண்டிற்கு 31.3.2010 முடிய விற்பனை வரி, வருமானவரி ஆகியவை செலுத்தியிருக்கும் ஆவணங்களை இவ்வலுவலகத்தில் செலுத்த ஒப்பந்தம் புதுப்பித்து இருக்க வேண்டும்.

12. பணிகளுக்கு முன்பணம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

13. இதர நிபந்தனைகளை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் தெரிந்துக் கொள்ளலாம்.

14. ஒப்பந்தப்புள்ளி படிவத்தை அரசு ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் இருந்து பதிவிறக்கி கொள்ளலாம்.

15. பணி முடிந்ததும், பட்டியல் தொகையில் வருமான வரி 2%, வருமான வரிக்கு கல்வி வரி மற்றும் உயர்கல்வி வரி 3%, விற்பனை வரி 2% விற்பனை வரிக்கு சர்சார்ஜ் 12% EMD 2% பிடித்தம் செய்யப்படும்.

16. குறிப்பிட்ட காலத்தில் பணியினை முடிக்காவிடில் கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கப்படும்.

| | |
|---|---|
| 30 நாட்களுக்கு வரை | : ஒப்பந்த மதிப்பில் 1% |
| 30 நாட்களுக்கு மேற்பட்டால் | : ஒப்பந்த மதிப்பில் 3 % |
| 45 நாட்களுக்கு மேற்பட்டால் | : ஒப்பந்த மதிப்பில் 5% |
| 90 நாட்களுக்கு மேற்பட்டால் | : ஒப்பந்ததாரர் பதிவு நீக்கம் செய்யப்படும். |

(ஒம்) பி. கே. முரளி
தலைவர்.
பாலக்கோடு பேரூராட்சி ,
தருமபுரி மாவட்டம்

மு.இராஜேந்திரன்
செயல் அலுவலர்
பாலக்கோடு பேரூராட்சி
தருமபுரி மாவட்டம்

**பெறுதல் :**

அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், பாலக்கோடு பேரூராட்சி, தருமபுரி மாவட்டம்.

**நகல் :**

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மாவட்ட ஆட்சியரகம், தருமபுரி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள். தருமபுரி.
3. இளநிலை பொறியாளர், தேர்வு நிலை பேரூராட்சி ,பாலக்கோடு.
4. அலுவலக தகவல் பலகைக்கு.